# <u>மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்</u>

**பொருள் எண்: 01.**

**<u>வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வள்ளலார் சபைக்கு அருகில் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் புதியதாக அரசு கலைக்கல்லூரி கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்னகீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து அரசு கலைக்கல்லூரி கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகர்மன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**பொருள் எண்: 02.**

**<u>வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>**

பாரராளுமன்ற பொதுத் தேர்தல் – 2024 தமிழகத்தில் 19.04.2024ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழகம் 39 தொகுதி மற்றும் புதுச்சேரி ஒரு தொகுதி உட்பட மொத்தம் 40 தொகுதியிலும் வெற்றி பெற்று 40க்கு 40 என மகாத்தான வெற்றி பெற்றதற்கு தமிழகத்தில் சிறப்பான நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தமிழகம் முழுவதும் சிறப்பான தேர்தல் பிரச்சாரம் செய்த மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாவட்டத்தை சிறப்பாக வழிநடத்தி வரும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அவர்களுக்கும் இந்நகர்மன்றம் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது

**பொருள் எண்: 03.**

**<u>வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>**

இந்நகராட்சியில் விக்கரவாண்டி முதல் கும்பகோணம் வழியாக தஞ்சாவூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலை முக்கிய பிரதான சாலையாகும். இச்சாலையின் வழியாக அரசு பேருந்துகள், தனியார் பேருந்துகள், லாரிகள், கனரக வாகனங்கள் , நான்கு சக்கர வாகனங்கள், மருத்துவ உதவிக்காக செல்லும் ஆம்புலன்ஸ்கள், ஆட்டேக்கள் மற்றும் பள்ளி கல்லூரிகளுக்கு செல்லும் இரண்டு சக்கர வாகனங்கள் என மொத்தம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் வந்து செல்கின்றன. இச்சாலையின் குறுக்கே இரயில்வே தொடர் வண்டி வழித்தடம் அமைந்துள்ளது. இதில் கடலூர் to சேலம் செல்லும் இரயில்வே தொடர் வண்டி வடலூர் மார்ககமாக செல்கின்ற நேரத்தில் இரயில்வே கேட் போடுவதால் வாகனங்கள் நீண்ட நெடுதூரம் நிறுத்தம் செய்யப்பட்டு போக்குவரத்து நெரிசல் அதிகளவில் ஏற்படுவதோடு பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுத்து செல்ல வரும் இரயில்வே தொடர் வண்டியில் அதிகளவில் பெட்டிகள் இணைக்கப்பட்டு வடலூர் மார்க்கத்தில் நிறுத்தம் செய்யப்படும் வேளையில் பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்தும் அதிகளவில் சிரமத்திற்கு ஆளாகின்றனர் மேலும் மருத்துவ உதவிக்காக செல்லும் ஆம்புலன்ஸ்களும் நோயாளிகளும் கடும் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர் எனவே இரயில்வே வழித்தடத்தில் நிறுத்தப்படும் இரயில்வே தொடர் வண்டியில் அதிகளவில் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் நான்கு (4) எண்ணிக்கையிலான பெட்டிகளை குறைக்கும் பட்சத்தில் இரயில்வே கேட் போடவேண்டிய அவசியம் ஏற்படாது இதனால், போக்குவரத்து நெரிசல் ஏற்பாடது. எனவே, 4 எண்ணிகையிலான பெட்டிகளை குறைக்க இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொருள் எண்: 04.**

**வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**

இந்நகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்ட மதிப்பீடு ரூ.3.50 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அலுவலக கட்டடம் திறப்பு விழா மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் 02.03.2024 (சனிக்கிழமை) நாளன்று திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் , மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகர்மன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**பொருள் எண்: 05.**

**வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**

2021 - 2022 சட்டமன்ற அறிவிப்பு எண்.03 இல் வடலூரில் " வள்ளலார் சர்வதேச மையம்" அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் , இப்பணிக்கென ரூபாய் 99.90 கோடி அரசு நிதி ஒதுக்கீடும் செய்து அறிவிப்பு வெளியிட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.M.K.ஸ்டாலின்** அவர்களுக்கும், **மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.M.R.K.பன்னீர்செல்வம்** அவர்களுக்கும், **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.P.K.சேகர் பாபு** அவர்களுக்கும், வடலூர் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் இம்மையத்தை வரவேற்றும் நன்றி தெரிவிப்பது தொடர்பாக.

**தீர்மானம் :**

2021 - 2022 சட்டமன்ற அறிவிப்பு எண்.03 இன்படி வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் "வள்ளலார் சர்வதேச மையம்" SITE 'A' என பார்வதிபுரம் கிராமம் புல எண்.257/1A, 257/1B,257/1C,257/1E,257/2, 257/3 மற்றும் 257/4 இல் மொத்தம் 28.82.50 ஹெக்டேர் இடத்தில் வருகின்ற பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தியான மண்டபம், பாடசாலை, கருத்தரங்க கூடம், பாதுகாப்பு அறை, தகவல் மையம், அலுவல் கூடம், மின்நூலகம், அணுகுசாலைகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை அமைக்கப்பட உள்ளது.

SITE 'B' யில் பார்வதிபுரம் கிராம புல எண்.78/4,79/2 மற்றும் 82/2B2 இல் 12.74 ஏக்கர், இடத்தில் சித்த மருத்துவமனை முதியோர் இல்லம், பக்தர்கள் தங்கும் விடுதி, அணுகு சாலை மற்றும் சுற்றுச்சுவர் ஆகியன வருவதால் வடலூர் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் உயர்வதுடன் வடலூர் நகரமும் வளர்ச்சியை நோக்கி வளரும், சுற்றுலா பயணிகளின் வருகையால் சுற்றுலாவும் மேம்படும். எனவே, "வள்ளலார் சர்வதேச மையம் " அறிவிப்பினை சட்டமன்றத்தில் அறிவித்தும் , இப்பணிக்கென ரூ.99.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.M.K.ஸ்டாலின்** அவர்களுக்கும், **மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.M.R.K.பன்னீர்செல்வம்,** அவர்களுக்கும், **மாண்புமிகு இந்து சமய இறநிலையத்துறை அமைச்சர் திரு.P.K.சேகர் பாபு** அவர்களுக்கும், நகர் மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் வடலூர் பொதுமக்கள் சார்பாகவும் இம்மையத்தை வரவேற்று நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் மேற்படி மையம் அமைவதற்கான அனைத்து உதவிகளையும் செய்வதென ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 06**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2024 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 07**

வடலூர் நகராட்சி (முன்னாள் பேரூராட்சி) 17.12.2021 முதல் இராண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 19.93 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் அமைந்துள்ளன. 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 39514 ஆகும். இந்நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 48108க்கு ஏற்ப தினசரி 4.33 MLD குடிநீர் வழங்க வேண்டும். தற்பொழுது 48 ஆழ்துளை கிணறுகள் மூலம் கிடைக்கபெறும் உள்ளூர் நீர் ஆதாரத்தினை கொண்டு தற்போது வடலூர் நகராட்சி முழுவதும் தினசரி 3.55 MLD குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இந்நகராட்சியில் குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பணிக்காக நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அரசின் நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை பராமரிப்பு பணியாளர்களை கணக்கீடு செய்தும் மேலும், பணியாளர்களுக்கான தினசரி ஊதியத்தினை PWD SOR அல்லது மாவட்ட ஆட்சியர் விலைப்பட்டியல் விகிதத்தில் நிர்ணயித்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றறிக்கையின்படி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.அரசின் நெறிமுறை மற்றும் அளவுகோலின்படி 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணியினை மேற்கொள்ள ஆறு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூ.14.00 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 552/2024/இ1**

**பொருள் எண்: 08**

இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் காலங்களில் 26 மேல்நிலை மற்றும் 1 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு உந்து குழாய்கள் மற்றும் வீடுகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, 01 முதல் 14 வார்டுகளின் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யவும் குடிநீர் பராமரிப்பு பணிக்காக மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 550/2024/இ1**

**பொருள் எண்: 09**

இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் காலங்களில் 26 மேல்நிலை மற்றும் 1 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு உந்து குழாய்கள் மற்றும் வீடுகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களில்

அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, 15 முதல் 27 வார்டுகளின் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சரிசெய்யவும் குடிநீர் பராமரிப்பு பணிக்காக மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 551/2024/இ1**

**பொருள் எண்: 10**

இந்நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 27 வார்டுகளுக்கு தினசரி 3.55 MLD குடிநீர் 26 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி கோடைகாலங்களில் நோய் தொற்று ஏதும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கையாக நீர்ம குளோரின்(Eriction of Sodium hypo Cllorite Liguid Bleaching liquid) ஒரு இட்சம் லிட்டர் குடிநீருக்கு இரண்டு லிட்டர் என குடிநீரில் கலந்து பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 15,000 லிட்டர் கொள்முதல் செய்யும் பணி மற்றும் குளோரின் கலக்கும் குழாய்கள் மற்றும் Valveகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 549/2024/இ1**

**பொருள் எண்: 11**

இந்நகராட்சியில் நகர் மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண் TN 31 CE8496. ஆணையாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8476 மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8412 ஆகியவற்றிற்கு நகர் மன்றத்தலைவர் ஈப்பு வாகனத்தை இயக்க நிரந்தர பணியாளர் ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார். ஆணையாளர் ஈப்பு வாகனம் மற்றும் நகராட்சி பொறியாளர் நிரந்ததர ஒட்டுநர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அரசின் நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை பணியாளர்களை கணக்கீடு செய்தும் மேலும், பணியாளர்களுக்கான தினசரி ஊதியத்தினை PWD SOR அல்லது மாவட்ட ஆட்சியர் விலைப்பட்டியல் விகிதத்தில் நிர்ணயித்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றறிக்கையின்படி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் M2/509309/2023. நாள்.19.06.2023ல் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசின் நெறிமுறை மற்றும் அளவுகோலின்படி வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணியினை மேற்கொள்ள ஆறு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூ.3.20 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 548/2023/இ1**

**பொருள் எண்: 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19, சேராக்குப்பம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு இடையூராக உள்ள உயிருள்ள 17 மரங்களை அகற்ற அனுமதி கோரப்பட்டதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண் 4631–11/2021/கு, நாள்,08.05.2024ல் அனுமதி பெறப்பட்டது. பொது ஏலம் விட பொது ஏலம் அறிவிப்பு வரைவு தமிழ் தினசரி நாளிதழில் (10X5cm) விளம்பரம் செய்து தரக்கோரி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம் , கடலூர் மாவட்டம் அவர்களிடம் கோரப்பட்டதில் 14.06.2024ல் மக்கள் குரள் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான கட்டண தொகை ரூ.18900/– வழங்க பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 914/2023/இ1**

**பொருள் எண்: 13**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014ன் பிரிவு 38(1)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் திட்டம் 2015ன் விதி IIன் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக்குழுவின் எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட விபரப்படி உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | எண்ணிக்கை – 1 |
| 2. | தாழ்த்தப்பட்டோர் (மகளிர்) | எண்ணிக்கை – 1 |
| 3. | மாற்றுத்திறனாளிகள் வகுப்பினர் | எண்ணிக்கை –1 |
| 4. | சிறுபான்மையினர் வகுப்பினர் | எண்ணிக்கை –1 |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | எண்ணிக்கை –1 |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மகளிர்) | எண்ணிக்கை – 1 |
| | மொத்தம் | 6 நபர்கள் |

6 நபர்கள் தேர்ந்தெடுக்க தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான தொகை வருவாய் நிதியிலிருந்து ஈடுசெய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:345 /2024/எப்1)**

**பொருள் எண்: 14**

வடலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி TECTUS INFRE PVT LID COIMATORE என்ற நிறுவனம் மூலம் 11.05.2023 பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு வருட காலம் முடிந்த நிலையில் மீண்டும் மூன்று மாத காலத்திற்கு அதே விலைப்புள்ளி விகிதாசாரத்தில் பணி மேற்கொள்ளவும் , நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து மறு அறிவிப்பு வரும்வரை திடக்கழிவு மேலாண்மைப் பணியை மேற்கண்ட நிறுவனம் பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் மாதம் ஒன்றுக்கு 25,00,000/– (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:515 /2023/எச்1)**

**பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7,8,9 மற்றும் 20 ஆகிய நான்கு வார்டுகளில் அமைந்துள்ள கச்சா வடிகால் , காட்டுக்கொல்லை முகப்பிலிருந்து அய்யன் ஏரி நுழைவு வரையில் வடிகாலில் முட்புதர்கள் புல் பூண்டுகள் வளர்ந்து அடர்ந்து போய் தண்ணீர் ஓடாமல்

அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்து சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. எதிர்வரும் காலம் மழை தொடர்ந்து எதிர்பாரதவிதமாக பெய்து வருவதால் முன்கூட்டியே ஹிட்டாச்சி வாகனம் மூலம் 3கிலோ மீட்டர் தூரம் 3மீட்டர் அகலம், 2மீட்டர் ஆழம் என தூர்வாரி செய்து தர வார்டு நகரமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதால் , அப்பணியினை செய்வதற்கு தோராய செலவினம் ரூ.4.50 (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:515 /2023/எச்1)**

**பொருள் எண்: 16**

இந்நகராட்சி அலுவலக நுழைவாயில், உட்புறம் , வெளிப்புறம் மற்றும் அலுவலக வளாகத்தை சுற்றியும் பாதுகாப்பு காரணமாக கண்காணிப்பு கேமாரா பொருத்துமாறு நகர் மன்ற தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து கண்காணிப்பு கேமரா (CCTV Cemara) பொருத்தும் பணிக்கு தயார் செய்யபட்டுள்ள மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 553/2024/இ1**

**பொருள் எண்: 17.**

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டட வளாகத்திற்கு மேற்கு நுழைவாயில் சுற்று சுவர், கிரில் கேட் அமைத்தல் , அலுவலகத்தில் மின் வெட்டு நேரங்களில் கணினிகள் இயக்குவதற்கு ஏதுவாக முதல் மற்றும் தரைதளத்திற்கு தனி 3KVA Inverterகள் அமைத்தல் , ஜென்செட், மின்மீட்டர், மற்றும் RO சுத்தகரிப்பு நிலையத்திற்கு G.I மேற்கூரை அமைத்தல், நகர் மன்ற கூடத்திற்கு ஒலிபெருக்கி அமைத்தல், நகர் மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் கலந்தாய்வு கூடத்திற்கு தேவையான LED TV வாங்குதல் மற்றும் நகராட்சி பெயர் பலகைகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண். 547/2024/இ1**

**பொருள் எண்: 18.**

வடலூர் நகராட்சியின் 2023 – 2024ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். 564/2024/சி1**

**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி.**

## வடலூர் நகராட்சி

## மன்றக் கூட்ட அழைப்பிதழ்

*************

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 24.06.2024.திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.